**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

அசல் வழக்கு எண்.02/2025 நாள்– 10.12.2025

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.இரா.கோகிலாவாணி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– பிரபு(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 29.07.2013 – ஞானசௌந்தரி, வாதி பிரபுவை சுவீகாரம் எடுத்துக் கொண்ட சுவீகார பத்திரம் சாத்தூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.BK4/22/2013 – SRO Copy – **வா.சா.ஆ.1**

2) 05.10.2016 – ஞானசௌந்தரி நீதிமன்றம் மூலம் விவாகரத்து செய்து கொண்ட H.M.O.P.No.122/2016 Decreetal order – சான்றிட்ட உண்மை நகல் – **வா.சா.ஆ.2**

3) ஞானசௌந்தரி இறப்பு சான்றிதழ் – உண்மை நகல் – **வா.சா.ஆ.3**

4) ஞானசௌந்தரி வாரிசு சான்றிதழ் – உண்மை நகல் – **வா.சா.ஆ.4**

5) 07.06.2021 – 1ம் பிரதிவாதி ஆலிஸ்மேரி மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட உயில் பத்திரம் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.BK3/61/2021 – SRO Copy – **வா.சா.ஆ.5**

6) 18.12.2023 – வாதி, 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் – **வா.சா.ஆ.6**

7) 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்க மறுத்து Unclaimed என்று திரும்ப வந்த கவர் – அசல் – **வா.சா.ஆ.7**

8) 22.12.2023 – மீண்டும் வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – நகல் – **வா.சா.ஆ.8**

9) வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் – **வா.சா.ஆ.9**

10) 07.05.2024 – 2, 3 பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் – **வா.சா.ஆ.10**

11) 2, 3 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை எண்ணம் 2 – அசல் – **வா.சா.ஆ.11**

12) 01.03.2017 – 1ம் பிரதிவாதி மகன் பாக்கிய பிரதீப் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட உயில் பத்திரம் ஆவண எண்.BK3/9/2017 – SRO Copy – **வா.சா.ஆ.12**

13) வாதியின் ஆதார் அட்டை – ஜெராக்ஸ் காப்பி – **வா.சா.ஆ.13 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).**

**(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)**